
**அக்டோபர் – 25**

# TNPSC துளிகள்

- தமிழ்நாட்டின் முதல் 18.4 கிலோமீட்டர் நீள BRTS மேம்பால/உயர்த்தப்பட்ட வழித்தடம், கிராண்ட் சதர்ன் டிரங்க் (GST) சாலையில் கிளாம்பாக்கத்திலிருந்து மஹிந்திரா வேர்ல்ட் சிட்டி வரை அமைக்கப்பட முன்மொழியப்பட்டுள்ளது.
- சபரிமலை ஐயப்பன் கோயிலில் பிராத்தனை செய்த முதல் இந்தியப் பெண் தலைவர் என்ற பெருமையை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பெற்றுள்ளார்.
    - குடியரசுத் தலைவர் V. V. கிரியின் வருகைக்குப் பிறகு சபரிமலைக்கு வருகை தந்த இரண்டாவது இந்திய குடியரசுத் தலைவர் இவர் ஆவார்.
- 2023 ஆம் ஆண்டிலிருந்து உலகின் பழங்காலப் பாரம்பரியத்தினைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் அக்டோபர் 17 ஆம் தேதியன்று சர்வதேச மகத்தான கலாச்சாரப் பாரம்பரிய தினம் (IDICH) அனுசரிக்கப் படுகிறது.
- சாலை விபத்துகள், வீழ்ச்சிகள் மற்றும் வன்முறையால் ஏற்படும் அதிர்ச்சி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 17 ஆம் தேதி அன்று உலக அதிர்ச்சி தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு அமைப்பு





- நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு மற்றும் இடஞ்சார்ந்த முடிவெடுத்தல் ஆதரவு அமைப்பு (RTFF & SDSS) பெற்ற முதல் இந்திய நகரமாக சென்னை மாறியுள்ளது.
- 107.2 கோடி ரூபாய் மதிப்பிலான இந்தத் திட்டமானது பாதிக்கப்படக் கூடிய பகுதிகளுக்கு நதி மற்றும் தெருக்கள் அளவிலான வெள்ள முன்னறிவிப்புகளை வழங்குகிறது.
- இந்த அமைப்பு ஆனது சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்கள் உட்பட சுமார் 4,974 சதுர கி.மீ பரப்பளவில் நிறுவப் பட்டுள்ளது.
- இது அடையாறு, கூவம், கொசஸ்தலையாறு மற்றும் கோவளம் நதிகளின் துணைப்

படுகைகளைக் கண்காணிக்கிறது.

- RTFF & SDSS ஆனது மாநிலத்தின் பேரிடர் மேலாண்மை தளமான TNSMART உடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- முன்னறிவிப்புகள் ஆனது முக்கிய அரசு நிறுவனங்களுடன் பகிரப் பட்டு TN-Alert கைபேசி செயலி மூலம் புதிய தகவல்களைத் தேர்ந்தெடுக்கும்.

## தமிழ்நாட்டின் மொத்தப் பொறுப்புகள்





- தமிழ்நாடு மாநில நிதிப் பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மைச் சட்டம் (TNFR சட்டம்), 2003, மொத்தப் பொறுப்புகளை "மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மாநிலத்தின் பொதுக் கணக்கின் கீழ் உள்ள பொறுப்புகள்" என்று வரையறுக்கிறது.
- மாநிலத்தின் திட்டமிடப்பட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நிறுவனங்கள் / நிறுவனங்களால் வாங்கப் படும் கடன்கள் அதன் நிதிக் கணக்குகளில் பதியப் படுவதில்லை.
- இந்தக் கடன்கள் மறைமுகமாக மாநிலத்தின் பொறுப்புகளில் சேர்க்கப் படுகின்றன.
- மாநிலத்தின் திட்டமிடப்பட்டத் திட்டங்களுக்கு, அசல் மற்றும் வட்டியானது மாநில அரசால் செலுத்தப் படுகிறது.
- 2021-22 நிதியாண்டிலிருந்து அமலுக்கு வரும் வகையில், பட்ஜெட்டுக்கு வெளியே கடன்களைக் கட்டுப்படுத்தவும், மாநிலங்களிடையே நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்தவும், 'அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள்' வாங்கும் கடன்கள், அசல் மற்றும்/அல்லது வட்டி ஆகியன மாநிலப் பட்ஜெட்டுகள் மற்றும்/அல்லது வரிகள்/செஸ் அல்லது அந்த மாநிலத்தின் வேறு எந்த வருவாயின் மூலம் அவை திருப்பிச் செலுத்தப் படுகின்றன என்பதோடு அவை மாநில அரசாங்கங்களுக்குக் கடன் வாங்குவதற்கான ஒப்புதலை வழங்குவதற்காக ஒரு காரணியாகக் கொள்ளப்படுகின்றன.
- சில மாநிலங்கள் பட்ஜெட்டுக்கு வெளியே கடன்களைப் பயன்படுத்தி நிகர கடன் வாங்கும் உச்ச வரம்பைத் தவிர்ப்பதன் விளைவைக் கருத்தில் கொண்டு இது செய்யப் பட்டது.
- தமிழ்நாடு உட்பட மாநிலங்கள், மாநில மேம்பாட்டுக் கடன்கள் (SDLs) எனப்படும்

பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் நிதி திரட்டுகின்றன.

- இந்தப் பத்திரங்களுக்கான ஏலத்தை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) நடத்துகிறது.
- இந்தப் பத்திரங்கள் பல்வேறு காலக் கட்டங்களுக்கு வெளியிடப்படுகின்றன என்பதோடு மேலும் அதன் முதிர்ச்சியின் போது அம்மாநிலங்கள் அசல் தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும்.
- SDLகள் தமிழ்நாட்டின் நிலுவையில் உள்ள கடன்களில் பெரும்பகுதியை உருவாக்குகின்றன.
- மாநிலங்களுக்கான கடன் வாங்கும் உச்ச வரம்பை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.
- கடன் வாங்கும் உச்சவரம்பு 2025-26 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 3% ஆகும்.
- மின்சார விநியோகச் சீர்திருத்தங்களை மேற்கொள்வது மற்றும் மாநிலத்திற்குள் மின் பரிமாற்றத் திறனை அதிகரிப்பதைப் பொறுத்து மாநிலங்களுக்கு GSDPயில் 0.5% கூடுதல் கடன் வாங்க அனுமதிக்கப்படுகிறது.
- 2025-26 ஆம் ஆண்டில் மொத்தம் ₹1,62,096.76 கோடி கடன் வாங்கி ₹55,844.53 கோடியினைத் திருப்பிச் செலுத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.
- இதன் விளைவாக, 2025-26 ஆம் ஆண்டுக்கான மாநில பட்ஜெட்டின்படி, மார்ச் 31, 2026 நிலவரப்படி நிலுவையில் உள்ள கடன் ₹9,29,959.3 கோடியாக இருக்கும்.
- CAG அறிக்கையின்படி, 2024-25 முதல் வட்டிக்கான மாநிலத்தின் பொறுப்பு ₹29,159.18 கோடியாக இருக்கும்.
- மேலும் அடுத்த 10 ஆண்டுகளில் நிலுவையில் உள்ள சந்தைக் கடன்களில் அசல் தொகை ₹3,88,202.82 கோடியாக இருக்கும்.

## கூடலூரில் குறிஞ்சி மலர்கள்




- கூடலூரில் புதிதாக அறிவிக்கப்பட்ட காப்புக் காட்டில் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு குறிஞ்சி (ஸ்ட்ரோபிலாந்தஸ் செசிலிஸ்) மலர்ந்துள்ளன.
- இந்த மலர்தல் நிகழ்வானது, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் புல்வெளிகள் மீண்டும் புத்துயிர் பெறுவதை குறிக்கின்றன மற்றும் மாறி வரும் பருவநிலை வடிவங்களைப் பிரதிபலிக்கின்றன.

- 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் நீலக்குறிஞ்சி (ஸ்ட்ரோபிலாந்தஸ் குந்தியானா) போலல்லாமல், செசிலிஸ் இனம் ஆனது 8 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும்.
- நீலகிரியில் ஊதா, நீலம், வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பு என பல்வேறு நிறங்களில் 33 குறிஞ்சி வகைகள் காணப் படுவதாக தாவரவியலாளர்கள் அடையாளம் கண்டு உள்ளனர்.

# தேசியச் செய்திகள்

## ORS பயன்பாட்டிற்கு FSSAI தடை

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) ஆனது பானங்களின் தயாரிப்புப் பெயரிடலில் "ORS" (வாய்வழி மீள்நீரேற்றக் கரைசல்) என்ற சொல்லினைப் பயன்படுத்துவதைத் தடை செய்தது.
- சில பானங்களின் ஆரோக்கியம் சார்ந்த நன்மைகள் குறித்த தவறான கூற்றுகளைத் தடுக்க இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.
- இந்த உத்தரவானது இந்தியா முழுவதும் உள்ள அனைத்து பான உற்பத்தியாளர்கள் மற்றும் சந்தைப்படுத்துபவர்களுக்கும் பொருந்தும்.
- இந்த உத்தரவை மீறும் நிறுவனங்கள் 2006 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய நிலைகள் சட்டத்தின் கீழ் அபராதங்களை எதிர்கொள்ள நேரிடும்.




## NMPA ஆணையத்திற்கான புதிய திட்டங்கள்

- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் ஆனது, புதிய மங்களூர் துறைமுக ஆணையத்தின் (NMPA) பொன் விழா கொண்டாட்டங்களைத் தொடங்கியது.
- துறைமுக உள்கட்டமைப்பு, தளவாடச் செயல்திறன் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்காக எட்டு பெரிய கடல்சார் மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கப் பட்டன.

- NMPA ஆனது ஆண்டிற்கு 104 மில்லியன் டன்கள் என்ற மொத்த திறன்களுடன் தற்போது ஆண்டுதோறும் 46.01 மில்லியன் டன் சரக்குகளைக் கையாளுகிறது.
- சாகர்மாலா திட்டத்தின் கீழ், 2035 ஆம் ஆண்டிற்குள் 5.8 லட்சம் கோடி ரூபாய் மதிப்பு உள்ள 840 திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன; 1.41 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள 272 திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- தொடங்கப்பட்ட எட்டு திட்டங்களில் பின்வருவன அடங்கும்:
    - மொத்தம் 14,000 மெட்ரிக் டன் திறன் கொண்ட இரண்டு மூடப்பட்ட சேமிப்புக் கிடங்குகளின் கட்டுமானம்.
    - சர்வதேசச் சுற்றுலாப் பயணிகளுக்காக வேண்டி பிரத்தியேகப் பயணக் கப்பல் நுழைவாயிலை உருவாக்குதல்.
    - RFID குறியீடுடன் கூடிய சரக்கு கையாளுதல், சுங்கம் மற்றும் CISF வசதிகளுடன் KK நுழைவு வாயில் நுழைவு மற்றும் வெளியேறும் இடத்தை மாற்றியமைத்தல்.
    - சுங்க மையத்தில் ஒரு நாளைக்கு 50 முதல் 80 லாரிகள் வரை செல்லக் கூடிய வகையில் சரக்குந்து நிறுத்துமிட முனையத்தை விரிவுபடுத்துதல்.
    - MDL தளத்தில் வடிகால் வசதிகளுடன் 675 மீட்டர் முன் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர் (PQC) சாலையை அமைத்தல்.
    - பைக்கம்பாடியில் 180 முதல் 200 லாரிகள் வரை செல்லக்கூடிய வகையில் 20,000 சதுர மீட்டர் பரப்பளவில் சரக்குந்து நிறுத்துமிட முனையத்தை உருவாக்குதல்.
    - பொது-தனியார் கூட்டாண்மை முறையில் 107 கோடி ரூபாய் முதலீட்டில் 150 படுக்கைகள் கொண்ட பல்நோக்கு மருத்துவமனையை நிறுவுதல்.
    - மருத்துவமனைப் பயனாளிகளுக்காக என்று பிரத்தியேக மருத்துவச் செயலியை அறிமுகப் படுத்துதல்.
- ஹரித் சாகர் வழிகாட்டுதல்கள், பசுமை இழுவைப்படகு மாற்றம் திட்டம் மற்றும் பசுமைக் கப்பல் போக்குவரத்து வழித்தடங்கள் போன்ற முன்னெடுப்புகள் மூலம் நிலைத் தன்மை வலியுறுத்தப்படுகிறது.




## பெண்களை மையமாகக் கொண்ட UPI – LxmePay

- பெண்களுக்கான இந்தியாவின் முன்னணி நிதித் தளமான Lxme, பெண்களுக்காக

பிரத்தியேகமாக LxmePay எனப்படும் நாட்டின் முதல் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தினை (UPI) அறிமுகப்படுத்தியுள்ளது.

- LxmePay ஆனது மற்ற LxmePay பயனர்களிடமிருந்து பெறப்பட்ட பணம் உட்பட ஒவ்வொரு பரிவர்த்தனையிலும் பயனர்களுக்கு டிஜிட்டல் தங்கத்தை வெகுமதியாக அளிக்கிறது.
- பெண்கள் தங்கள் பணங்களைத் திறமையாக நிர்வகிக்க உதவும் வகையில் இந்தச் செயலி சீர்மிகு செலவு கண்காணிப்பு, தானியங்கி நுண்ணறிவுகள் மற்றும் மாதாந்திர எச்சரிக்கைகளை வழங்குகிறது.




## சர்வதேசச் செய்திகள்

### கஃபாலா அமைப்பை ஒழித்தல்





- சவுதி அரேபியா 2025 ஆம் ஆண்டில் ஒரு பெரிய தொழிலாளர் சீர்திருத்தத்தில் அதன் 50 ஆண்டுகால கஃபாலா நிதியளிப்பு/ஸ்பான்சர்ஷிப் முறையை முடிவுக்குக் கொண்டு வந்தது.

- இந்த அமைப்பு ஆனது தொழிலாளர்களின் குடியிருப்பு, சட்டப்பூர்வ அந்தஸ்து மற்றும் வேலை மாற்றங்கள் மீது முதலாளிகளுக்கு கட்டுப்பாட்டை வழங்கியது.
- பல இந்தியர்கள் உட்பட சுமார் 1.34 கோடி புலம்பெயர்ந்தத் தொழிலாளர்கள் இதன் மூலம் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தொழிலாளர்கள் தற்போது முதலாளியின் ஒப்புதல் இல்லாமல் தங்களது வேலைகளை மாற்றலாம் மற்றும் வெளியேறும் நுழைவு இசைவுச் சீட்டுகள் இல்லாமல் நாட்டை விட்டு வெளியேறலாம்.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் தங்க இருப்பு 2025

- இந்தியாவின் தங்க இருப்பு ஆனது முதன்முறையாக 100 பில்லியன் டாலர்களைத் தாண்டி, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதி நிலவரப்படி 102.37 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, ஒட்டு மொத்த அந்நியச் செலாவணி இருப்பில் 697.78 பில்லியன் டாலர் என்ற அளவிற்கு சிறிது குறைவு ஏற்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.
- அந்நியச் செலாவணி இருப்புகள் 5.61 பில்லியன் டாலர்கள் குறைந்து 572.10 பில்லியன் டாலர்களாக குறைந்துள்ளது என்பதோடு இது அந்நியச் செலாவணி இருப்புகளில் ஒட்டு மொத்தச் சரிவை ஏற்படுத்தியது.
- சிறப்பு எடுப்பு உரிமைகள் (SDR) 18.68 பில்லியன் டாலர்களாகக் குறைந்துள்ளது.
- சர்வதேச நாணய நிதியத்தில் (IMF) இந்தியாவின் இருப்பு நிலை 36 மில்லியன் டாலர்கள் குறைந்து 4.63 பில்லியன் டாலர்களாக உள்ளது.
- இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பில் தங்கத்தின் பங்கு கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது என்பதோடு, இது தங்க மதிப்பில் ஏற்பட்ட 3.60 பில்லியன் டாலர்கள் அதிகரிப்பால் அதிகரித்துள்ளது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## PUNCH திட்டம்

- நாசாவின் PUNCH திட்டம் (2025) சூரியக் காற்றின் இயக்கவியலை வெளிப்படுத்தியது.

- கரோனா அடுக்கு மற்றும் அயனிச் செறிவு மண்டலத்தினை ஒன்றிணைக்கும் துருவமானி என்பதைக் (Polarimeter to Unify the Corona and Heliosphere) குறிக்கிறது.
- இது சூரியக் கரோனா மற்றும் சூரியக் காற்றை ஒற்றை, இணைக்கப்பட்ட அமைப்பாக ஆய்வு செய்கிறது.
- இந்தத் திட்டம் சூரியக் காற்றின் விரிவான படங்களைப் பிடிக்கிறது என்பதோடு, இதனால் கண்ணுக்குத் தெரியாத நிகழ்வுகள் புலப்படும்.
- சூரியக் காற்று சூரியனின் வெளிப்புற வளிமண்டலத்திலிருந்து வெளிப்படும் மின்னூட்டப் பட்ட துகள்களைக் கொண்டுள்ளது.
- அதிக சூரியச் செயல்பாட்டின் ஒரு கட்டமான தற்போதைய அதிகபட்ச சூரியச் செயல்பாட்டின் போது PUNCH செயல்படுகிறது.
- இந்தக் கட்டத்தில் அதிகரித்த சூரியக் கரும்புள்ளிகள், சூரியச் சுடர்கள் மற்றும் சூரிய வெப்ப உமிழ்வுகள் ஆகியவை அடங்கும்.
- விண்வெளி வானிலை மற்றும் பூமியில் அதன் விளைவுகள் பற்றிய முன்னறிவிப்பை மேம்படுத்த இந்த திட்டம் உதவுகிறது.
- சூரியப் புயல்கள் செயற்கைக்கோள்கள், புவியிடங்காட்டிச் செயல்பாடுகள், மின் கட்டமைப்புகள் மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகளைச் சீர்குலைக்கும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்


## ஐஸ்லாந்தில் கொசுக்கள்

- இதுவரை பதிவு செய்யப்பட்ட வரலாற்றில் முதல் முறையாக ஐஸ்லாந்தில் கொசுக்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- குளிரைத் தாங்கும் குலிசெட்டா அன்யூலேட்டாவின் மூன்று மாதிரிகள் ஹ்வால்ஃப்ஜோர்டூருக்கு அருகிலுள்ள க்ஜோஸ் பள்ளத்தாக்கில் கண்டுபிடிக்கப்பட்டன.
- அறிவியலாளர்கள் இந்தக் கண்டுபிடிப்பை பருவநிலை மாற்றம் மற்றும் குளிருக்கு ஏற்ற பூச்சி இனங்களின் வடக்கு நோக்கிப் பரவுதல் ஆகியவற்றுடன் இணைக்கின்றனர்.
- இந்தக் கண்டுபிடிப்பின் மூலம், பூமியில் கொசுக்கள் இல்லாத ஒரே கண்டமாக அண்டார்டிகா உள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்புத் திறன் கண்காணிப்பு அறிக்கை 2025





- இந்த அறிக்கை உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்புத் திறன் (AMR) ஆனது உயிர் காக்கும் சிகிச்சைகளின் செயல்திறனைக் குறைப்பதன் மூலம் உலக ஆரோக்கியத்தை அச்சுறுத்துகிறது.
- உலக சுகாதார அமைப்பின் (WHO) உலகளாவிய நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்புத் திறன் மற்றும் பயன்பாட்டுக் கண்காணிப்பு அமைப்பு (GLASS) நாடுகள் கண்காணிப்பு அமைப்புகளை உருவாக்கவும் தரப்படுத்தப்பட்ட தரவுகளைச் சேகரிக்கவும் வேண்டி நன்கு உதவுகிறது.
- 2023 ஆம் ஆண்டில், 104 நாடுகளில் 23 மில்லியனுக்கும் அதிகமான உறுதிப் படுத்தப் பட்ட இரத்த ஓட்டம், சிறுநீர் பாதை, இரைப்பை குடல் தொற்றுகள் மற்றும் "சிறுநீரக-பிறப்புறுப்பு கொனோரியா" (யூரோஜெனிட்டல் கொனோரியா) பாதிப்புகள் பதிவாகி உள்ளன.
- 2023 ஆம் ஆண்டில் 93 தொற்று-நோய்க்கிருமி- நுண்ணுயிர்க் கொல்லி கலப்புகளுக்கான ஈடு செய்யப் பட்ட உலகளாவிய மற்றும் பிராந்திய AMR

மதிப்பீடுகளை இந்த அறிக்கை வழங்குகிறது.

- இது 2018 முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான 16 முக்கிய நோய்க்கிருமி-நுண்ணுயிர்க் கொல்லி சேர்க்கைகளுக்கான எதிர்ப்புத் திறன் போக்குகளைக் கண்காணிக்கிறது.
- தேசியத் தரவு முழுமையை மதிப்பிடுவதற்கான ஒரு மதிப்பெண் வழங்கல் முறையை இந்த அறிக்கை அறிமுகப்படுத்துகிறது மற்றும் உலகளவில் AMR கண்காணிப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கிறது.


## உலகளாவிய பல பரிமாண வறுமைக் குறியீடு 2025




- UNDP மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முன்னெடுப்பு (OPHI) "Overlapping Hardships: Poverty and Climate Hazards" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டன.
- உலகளாவிய பல பரிமாண வறுமைக் குறியீடு (MPI) ஆனது வருமானத்திற்கு அப்பாற் பட்ட சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத் தரத்தில் கடுமையான வறுமையை அளவிடுகிறது.
- 2025 ஆம் ஆண்டின் அறிக்கை 109 நாடுகளை மதிப்பிட்டு, 1.1 பில்லியன் மக்கள், அதாவது 18.3 சதவீதம் பேர், கடுமையான பல பரிமாண வறுமையில் வாழ்கின்றனர் என்று கண்டறிந்துள்ளது.
- ஏழ்மை நிலையில் உள்ளவர்களில் சுமார் 43.6 சதவீதம் பேர், அதாவது சுமார் 501 மில்லியன் மக்கள், குறைந்தது பாதியளவிலான MPI குறிகாட்டிகளில் பற்றாக் குறையுடன் கடுமையான வறுமை நிலையை எதிர் கொள்கின்றனர்.
- உலக மக்கள்தொகையில் 33.6 சதவீதமாக இருக்கும் குழந்தைகள், பல பரிமாண ஏழ்மை நிலையில் உள்ள அனைத்து நபர்களில் 51 சதவீதப் பங்கினைக் கொண்டு உள்ளனர்.
- நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் 740 மில்லியன் ஏழ்மை நிலையில் உள்ள மக்கள் உள்ளனர் என்பதோடு இது உலகின் ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு ஆகும்.
- சுமார் 80 சதவீத ஏழைகள் வறட்சி, வெள்ளம் அல்லது கடுமையான வெப்பம் போன்ற பருவநிலை ஆபத்துகளுக்கு ஆளாகும் பகுதிகளில் வாழ்கின்றனர் என்பதோடு இது பற்றாக்குறையுடன் சுற்றுச்சூழல் ஆபத்தினையும் சேர்க்கிறது.
- இந்தியா 2005-06 ஆம் ஆண்டில் 55.1 சதவீதமாக இருந்த பல பரிமாண வறுமை நிலையை 16.4 சதவீதமாகக் குறைத்து, 414 மில்லியனுக்கும் அதிகமான மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளது.

- இந்தியாவில் ஏழ்மை நிலையில் உள்ள மக்களில் கிட்டத்தட்ட 99 சதவீதம் பேர் வெப்ப அலைகள், வெள்ளம் மற்றும் மாசுபாட்டால் பாதிக்கப்படும் பருவநிலைப் பாதிப்புக்கு உள்ளான பகுதிகளில் வாழ்கின்றனர்.


## நிலையான எரிபொருள் குறித்த IEA அறிக்கை 2025




- "Towards Common Criteria for Sustainable Fuels" என்ற தலைப்பிலான இந்த அறிக்கை சர்வதேச எரிசக்தி முகமையினால் (IEA) வெளியிடப்பட்டது.
- நிலையான எரிபொருள் பயன்பாடு ஆனது 2035 ஆம் ஆண்டிற்குள் நான்கு மடங்காக அதிகரிக்கும் என்று IEA கூறுகிறது.
- போக்குவரத்து மற்றும் தொழில்துறையில் புதைபடிவ எரிபொருள்களை சார்ந்து இருக்கும் நிலையைக் குறைக்க உயிரி எரிபொருள்கள், உயிரி வாயுக்கள் மற்றும் குறைந்த உமிழ்வு கொண்ட ஹைட்ரஜன் அவசியமாகும்.
- 2024 ஆம் ஆண்டு நிலவரப்படி நிலையான எரிபொருள்கள் ஏற்கனவே உலகளாவிய எண்ணெய்த் தேவையை ஒரு நாளைக்கு 2.5 மில்லியன் பீப்பாய்கள் என்ற அளவில் குறைக்கின்றன.
- உயிரி வாயுக்கள் மற்றும் ஹைட்ரஜன் பயன்பாடு அதிகரித்து வருவதுடன் திரவ உயிரி எரிபொருள்கள் ஆனது தற்போது உலகளாவிய போக்குவரத்து எரிசக்தி தேவையில் 4% பங்கினைக் கொண்டுள்ளன.
- பிரேசில் போன்ற நாடுகள் மொத்த எரிசக்தி நுகர்வில் சுமார் 10% என்ற அளவில் புதுப்பிக்கத்தக்க எரிபொருட்களைப் பயன்படுத்துகின்றன.
- 2035 ஆம் ஆண்டிற்குள், நிலையான எரிபொருட்கள் ஆனது உலகளவில் சாலைப் போக்குவரத்தில் 10%, விமானப் போக்குவரத்தில் 15% மற்றும் கப்பல் எரிபொருள் தேவையில் 35% ஆகியவற்றை வழங்க முடியும்.
- நிலையான எரிபொருட்களில் ஒட்டு மொத்த முதலீடுகள் ஆனது 2035 ஆம் ஆண்டிற்குள் 1.5 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டக்கூடும் என்ற நிலையில் இது சுமார் 2 மில்லியன் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

### உலகளாவிய ஓய்வூதியக் குறியீடு 2025

- மெர்சர் CFA நிறுவனத்தின் இந்தக் குறியீடு ஆனது 52 நாடுகளை அவற்றின் ஓய்வூதிய முறைகளின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தியது.
- நெதர்லாந்து 85.4 மதிப்பெண்ணுடனும் ஒட்டு மொத்த A தரவரிசையுடனும் குறியீட்டில் முதலிடத்தைப் பிடித்தது.
- இந்தியா 43.8 மதிப்பெண்ணுடனும், இந்தக் குறியீட்டில் மிகக் குறைவான D தர வரிசையுடனும் 52வது இடத்தைப் பிடித்தது.
- இந்தக் குறியீடு ஓய்வூதிய முறைகளை அதன் போதுமான தன்மை, நிலைத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடுகிறது.
- 80.0 மதிப்பெண்ணுடன் A தரவரிசையை அடைந்த முதல் ஆசிய நாடாக சிங்கப்பூர் மாறியது.
- இந்தியாவில் நிலவும் குறைந்த பணியாளர் பங்கேற்பு மற்றும் தனித்தனியே மாநிலங்களில் பிரித்து காணப்படும் ஓய்வூதியத் திட்டங்கள் போன்ற சவால்களையும் இந்த அறிக்கை எடுத்துக் காட்டியது.
- குவைத், நமீபியா, ஓமன் மற்றும் பனாமா போன்ற புதிய நாடுகள் 2025 ஆம் ஆண்டு குறியீட்டில் சேர்க்கப்பட்டன.




## விளையாட்டுச் செய்திகள்

### கால்பந்து உலகக் கோப்பையில் கேப் வெர்டே


- கேப் வெர்டே அணியானது எஸ்வதினி அணியை தோற்கடித்து FIFA உலகக் கோப்பை போட்டிக்கான முதல் தகுதியைப் பெற்றது.
- 600,000 மக்கள்தொகை கொண்ட இந்த தீவு நாடு, வட அமெரிக்காவில் நடைபெற உள்ள 2026 ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டிக்கு தகுதி பெற்ற ஒன்பது ஆப்பிரிக்க அணிகளில் ஒன்றாகும்.
- ஐஸ்லாந்திற்குப் பிறகு இப்போட்டிக்குத் தகுதி பெற்ற இரண்டாவது சிறிய நாடு கேப்

வெர்டே ஆகும்.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் - அக்டோபர் 17





- 1987 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான், தீவிர வறுமை, வன்முறை மற்றும் பட்டினி நிலையால் பாதிக்கப்பட்டவர்களை கௌரவிப்பதற்காக பாரீசில் உள்ள ட்ரோகாடெரோவில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடினர்.
- வறுமை என்பது மனித உரிமைகளை மீறுகின்ற ஒன்றாக அவர்கள் அறிவித்தனர் என்பதோடு மேலும் இந்த உரிமைகள் மதிக்கப்படுவதை உறுதி செய்ய ஒன்று பட வேண்டியதன் அவசியத்தை உறுதிப்படுத்தினர்.
- 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதியன்று, ஐ.நா. பொதுச் சபை இந்த நாளை அறிவித்தது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: Ending social and institutional maltreatment by ensuring respect and effective support for families என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## பத்தௌ மதத்திற்கான புதிய மக்கள் தொகை கணக்கெடுப்புக் குறியீடு

- அசாமில் உள்ள போடோ சமூகத்தின் பண்டைய பத்தௌ மதம் வரவிருக்கும் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் தனிக் குறியீட்டைப் பெற உள்ளது.
- இந்த முடிவு முதல் முறையாக பத்தௌ சமயத்திற்கு அதிகாரப்பூர்வ தேசிய அங்கீகாரத்தை வழங்குகிறது.
- பத்தௌ சமயம் நெருப்பு, காற்று, பூமி, வானம் மற்றும் நீர் ஆகிய ஐந்து கூறுகளை அடிப்படையாகக் கொண்டது.
- பத்தௌ உள்ளிட்ட தகவல் அளிப்பாளர்கள் தெரிவித்தபடி மக்கள் தொகை கணக்கெடுப்பாளர்கள் இந்த சமயத்தினைப் பதிவு செய்வார்கள்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★